NOOLAHAM
FOUNDATION

# பொறியியலாளர் தில்லைநாதன் சேகரங்களை எண்ணிமப்படுத்தல்



**NOOLAHAM FOUNDATION**

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | பொறியியலாளர் தில்லைநாதன் சேகரங்களை எண்ணிமப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2025/0004 |
| செயற்றிட்ட இடம் | யாழ்ப்பாணம் - இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | 2025 தை -2025 டிசம்பர் |
| அறிக்கையிடல் காலம் | 2025 தை -2025 டிசம்பர் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | Fribourg Tamil Manram Women's Association |
| செயற்றிட்டச் செலவுகள் | 177,400 ரூபா |

**1.** அறிமுகம்

அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் வரலாறு பெரும்பாலும் ஆவணங்களிலேயே பாதுகாக்கப்படுகிறது. இத்தகைய ஆவணங்கள் இழக்கப்படும் போது, ஒரு நாட்டின் அறிவுப் பாரம்பரியமும் மங்கிவிடும் அபாயம் உள்ளது.

இந்தப் பின்னணியில், பொறியியலாளர் தில்லைநாதன் முத்துசாமிப்பிள்ளை அவர்கள் தமது தனிப்பட்ட முயற்சியால் பல தசாப்தங்களாக சேகரித்து பாதுகாத்து வந்த அரிய ஆவணங்களை எண்ணிமப்படுத்தும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

1965–1977 காலப்பகுதியில் இலங்கை நெடுஞ்சாலைகள் திணைக்களத்தில் கட்டுமான பொறியாளராகவும், பின்னர் தலைமை ஒப்பந்த பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப சேவைகள் இயக்குநராகவும் பணியாற்றிய இவர், தற்போது இலங்கை தேசிய ஒப்பந்ததாரர்கள் சங்கத்தின் (வடக்கு கிளை) ஆலோசனை பொறியாளராக செயற்பட்டு வருகிறார்.

அவரது சேகரம் சுமார் **20,000** ஆவணங்களையும் **300,000** பக்கங்களையும் கொண்ட ஒரு அரிய அறிவுக் களஞ்சியமாகும்.

**2.** செயற்றிட்டத்தின் நோக்கம்

இச்செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

- பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த முக்கிய ஆவணங்களை அடையாளம் காணுதல்
- அவற்றை முறையான பட்டியலாக்கம் செய்தல்
- தேர்ந்தெடுக்கப்பட்ட ஆவணங்களை உரிய தரத்தில் எண்ணிமப்படுத்துதல்
- பொதுமக்கள், ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்களுக்காக இலவச அணுக்கத்தில் வழங்குதல்

**3.** செயற்றிட்ட செயல்பாடுகள்

செயற்றிட்டம் பின்வரும் கட்டங்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டது:

- சேகர மதிப்பீடு மற்றும் ஆவணத் தேர்வு
- ஆவணங்கள் வகைப்படுத்தல் (நூல்கள், இதழ்கள், அறிக்கைகள் போன்றவை)
- எண்ணிமப்படுத்தல் மற்றும் தர மேற்பார்வை
- மீதரவு உருவாக்கம்
- எண்ணிம சேமிப்பு மற்றும் வலைவாசல் இணைப்பு

**4.** செயற்றிட்ட அடைவுகள் **(Key Achievements)**

இச்செயற்றிட்டத்தின் கீழ்:

- **231** ஆவணங்கள்
- **21,706** பக்கங்கள்

வெற்றிகரமாக எண்ணிமப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், வலைவாசல் வழியாக பின்வரும் தொகுப்புகள் இலவச அணுக்கத்தில் வழங்கப்பட்டுள்ளன:

- 24 நூல்கள்
- 37 சிறப்பு மலர்கள்
- 47 இதழ்கள்
- 42 பிரசுரங்கள்
- 14 அறிக்கைகள்

5. ஆவணங்களின் முக்கியத்துவம்

இச்செயற்றிட்டத்தின் கீழ் எண்ணிமப்படுத்தப்பட்டுள்ள ஆவணங்கள் பல்வேறு ஆய்வு துறைகளுக்கு அரிய ஆதாரங்களாக விளங்குகின்றன. குறிப்பாக சில முக்கிய ஆவணங்கள் மற்றும் அவற்றின் ஆய்வுப் பயன்கள் பின்வருமாறு:

- **"The Medical Profession in Sri Lanka 1843–1980"**
  இலங்கையின் மருத்துவத் துறையின் வரலாற்று வளர்ச்சி, காலனித்துவ கால மருத்துவ அமைப்புகள், மற்றும் மருத்துவ கல்வி பரிணாமம் ஆகியவற்றை ஆய்வு செய்ய மிக முக்கியமான ஆதாரம்.

- **"The Colombo Medical School Centenary 1870–1970"**
  மருத்துவக் கல்வியின் நிறுவன வரலாறு மற்றும் அதன் சமூக தாக்கத்தைப் புரிந்துகொள்ள உதவும்.

- **"Proceedings of the First International Scientific Congress of the Family Planning Association of Sri Lanka (1974)"**
  குடும்ப கட்டுப்பாடு, மக்கள் தொகை கொள்கைகள், மற்றும் சமூக சுகாதார இயக்கங்கள் தொடர்பான ஆரம்பகால விவாதங்களை

பதிவு செய்கிறது.

- **“Trends in Causes of Death in Sri Lanka: 1971–79”**
  நோய்கள் மற்றும் மரண காரணிகளின் புள்ளிவிவர மாற்றங்களை ஆராய உதவும்.

- **“Family Health Impact Survey Sri Lanka 1981–82”**
  குடும்ப சுகாதார நிலை, சமூக சுகாதார சேவைகள் மற்றும் வாழ்க்கை தரம் ஆகியவற்றை ஆராய உதவும்.

- **Coconut Research Institute Leaflets (பல வெளியீடுகள்)**
  தென்னை விவசாயம், நோய் மேலாண்மை, மற்றும் உற்பத்தி முறைகள் தொடர்பான தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள்.

- **“Assessment of the Palmyrah Resource Profile…”**
  பனைவளத்தின் புவியியல், பொருளாதார, மற்றும் சமூக முக்கியத்துவத்தை ஆய்வு செய்ய உதவும்.

- **Ceylon Coconut Planters' Review (1962)**
  காலனித்துவ மற்றும் பின்னர் கால விவசாய பொருளாதார மாற்றங்களை ஆராய உதவும்.

- **Annual Reports (எ.கா: வீதி அபிவிருத்தி அதிகார சபை, நெல் சந்தைப்படுத்தல் சபை, தேசிய கடதாசி கூட்டுத்தாபனம்)**
  அரசாங்க நிறுவனங்களின் செயல்பாடுகள், திட்டங்கள், மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் பற்றிய முதன்மை தரவுகள்.

- **“The Institution of Engineers Ceylon Transactions” (1967, 1969)**
  பொறியியல் துறையில் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகள் மற்றும் கண்டுபிடிப்புகளை பதிவு செய்கிறது.

- **“The Botanic Gardens of Sri Lanka (1985)” & “Mangroves of Sri Lanka”**
  உயிரியல் வளங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மற்றும் உயிரிசைமையியல் தொடர்பான ஆய்வுகளுக்கு ஆதாரம்.

**6.** சமூக மற்றும் கல்வி தாக்கம் **(Impact)**

இச்செயற்றிட்டம் பல்வேறு தரப்பினருக்கு பயனளிக்கிறது:

- ஆய்வாளர்கள் மற்றும் **PhD** மாணவர்கள்
  → அரிய முதன்மை ஆதாரங்களுக்கு அணுகல்
- மாணவர்கள்
  → கல்வி மற்றும் ஆய்வு ஆதாரங்கள்
- கொள்கை அமைப்பாளர்கள்
  → வரலாற்று தரவின் அடிப்படையில் முடிவெடுக்கும் திறன்
- பொது மக்கள்
  → இலவச அறிவு அணுகல்

**7.** செயற்றிட்டத்தின் தனிச்சிறப்பு

- தனிப்பட்ட சேகரத்தை பொது அறிவாக மாற்றுதல்
- பல துறைகளை இணைக்கும் ஆவணங்கள்
- அரிய மற்றும் பழமையான வெளியீடுகளின் பாதுகாப்பு
- உலகளாவிய இலவச அணுகல்

**8.** சவால்கள்

- சேதமடைந்த மற்றும் பழமையான ஆவணங்களை கையாளுதல்
- பரந்த சேகரத்தில் இருந்து முக்கிய ஆவணங்களைத் தேர்வு செய்தல்
- நேர மற்றும் வளக் கட்டுப்பாடுகள்

**9.** முடிவுரை

இந்த செயற்றிட்டம் ஒரு தனிநபரின் வாழ்நாள் சேகரத்தை,அனைவருக்கும் பயன்படும் நிலையான எண்ணிமப்படுத்தப்பட்ட அறிவுக் களஞ்சியமாக மாற்றிய ஒரு முக்கிய முயற்சியாகும்.

இது பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வரலாற்றை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல்,எதிர்கால ஆய்வுகள் மற்றும் கல்விக்கான வலுவான அடித்தளமாகவும் விளங்குகிறது.

**10. இணைப்பு (Access Link)**

இச்செயற்றிட்டத்தின் கீழ் எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களை பின்வரும் வலைவாசல் வழியாக அணுகலாம்:

https://www.noolaham.org/wiki/index.php/வலைவாசல்:தில்லைநாதன்_முத்துசாமிப்பிள்ளை_சேகரம்